Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 334

வியாழக்கிழமை 26 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 09 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## ரணிலுக்கு மஹிந்தவின் தொலைபேசி 'அர்ச்சனை'

கொழும்பு, ஒக். 26
அமைச்சரவை மாற்றம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார் என கொழும்பு ஊடகங்கள் »11

### ரவுடிகளை மீட்பதற்காக

## சி.ஐ.டி. அலுவலகம் மீது தாக்குதல் நடத்தத் திட்டம்

கொழும்பு, ஒக். 26
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிழல் உலக தாதாக்களான 'ஹரக் கட்டா', 'குடுசலிது' ஆகியோரைதப்பிக்கவைப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களம்மீது »11

## வீடுடைத்து திருட்டு

### பணமும் போனும் பறிபோயின

யாழ்., ஒக். 26
கோப்பாயில் வீடு புகுந்து ஒன்றரை இலட்சம் ரூபா பணம் மற்றும் »11

# கொழும்பில் நங்கூரமிட்டது சீனாவின் ஆய்வுக் கப்பல்

### பொய்த்தது வெளிவிவகார அமைச்சரின் கூற்று



கொழும்பு, ஒக்ரோபர் 26
இந்த மாதம் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்த சீன ஆய்வுக் கப்பல் கொழும்புத்துறைமுகத்தில் நேற்று மாலை நங்கூரமிட்டது. »11

## கடன் வழங்கியோரை சமமாக நடத்துங்கள்

### அமெரிக்கா இலங்கைக்கு 'டோஸ்'



கொழும்பு, ஒக். 26
இலங்கை, கடன் வழங்கிய அனைவரையும் சமமாக நடத்த வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.
மத்திய வங்கி »11

## மொட்டுவின் நாயகன் ரெடி!

கொழும்பு, ஒக். 26
தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை முடிவு செய்துவிட்டதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி அறிவித்துள்ளது. உரிய நேரத்தில் அவரது பெயர் அறிவிக்கப்படும் எனவும் அந்தக் கட்சி கூறியுள்ளது.
மொட்டுக் கட்சியின் ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கான பதிலை தொலைக்காட்சி நாடகத்துடன் ஒப்பிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் »11

## கோமாளிகளின் கூடாரமே இலங்கை நாடாளுமன்றம்

### சொல்கிறார் சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி, ஒக். 26
இலங்கையின் நாடாளுமன்றம் கோமாளிகளின் கூடாரமாக மாறி உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். »11

## சீனாவுக்குச் சார்பாகவே செயற்படுகிறார் டக்ளஸ்!

### மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 26
கடற்றொழில் அமைச்சின் சட்டவிரோதமான செயற்பாடுகள் மற்றும் சீனாவோடு இணைந்து கடற்றொழில் அமைச்சர் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் எங்களது வாழ்வாதாரத்தை அழித்து, இருப்பையும் இல்லாதொழிக்கும் வகையில் அமைந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ள வடக்கு மாகாண மீனவர்கள் அழிவில் »11



## தமிழர்கள் எல்லோரையும் வெட்டாமல் விடமாட்டேன்

### கலையாடிய சுமணரத்ன தேரர் சாந்தப்படுத்திய பொலிஸார்

மட்டக்களப்பு, ஒக். 26
அனைத்துத் தமிழர்களையும் வெட்டுவேன், என்ன செய்கிறார்கள் எனப் பார்ப்போம் என்று மட்டக்களப்பு மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் எச்சரித்துள்ளார்.
மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட இருதயபுரம் பகுதிக்கு நேற்று »11

## மனைவியின் கழுத்தில் அடித்தேன் கீழே விழுந்து உயிரிழந்துவிட்டார்

### முல்லைத்தீவில் கைதான கணவருக்கு மறியல்

முல்லைத்தீவு, ஒக். 26
முல்லைத்தீவு - நீராவிப்பிட்டி கிழக்குப் பகுதியில் தனது மனைவியைக் கொன்று புதைத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயம்

# தனிநபர் உரிமைகோரல்; வழக்கு தள்ளுபடியானது

கிளிநொச்சி, ஒக். 26

**திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய உரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.**

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதும் பராமரிப்புக்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது இந்த ஆலயம் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது. கோயில் வருமானத்தில் ஒரு பகுதி வன்னிப்பிராந்தியத்தில் இந்து சமய வளர்ச்சிக்காக இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மூலம் செலவிடப்படுகிறது.

திருமுறிகண்டிப்பிள்ளையார் கோயிலின் பரம்பரை அறங்காவலர் என்று கூறிக்கொள்ளும் ஒருவரால், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நிர்வகித்து வரும் இந்த ஆலயத்தைத் தன்னிடம் மீள ஒப்படைக்குமாறு உத்தரவிடக்கோரி நீதிமன்றில் கடந்த 2011ஆம் ஆண்டு அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்யப்பட்டது. நீண்டகாலமாக இடம்பெற்ற இவ்வழக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழுவால் நேற்றுமுன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டது. குறித்த ஆலயம் அமைந்துள்ள இடம் அரச காணி என்பதால் தனி நபர் ஒருவர் ஆலயத்துக்கு உரிமை கொண்டாட முடியாது. நீண்ட காலமாக இவ்வழக்கு இடம்பெற்று வந்ததால் குறித்த பிரதேசத்தில் அடிப்படை சுகாதார வசதிகள், உட்கட்டுமானப் பணிகள் மற்றும் பிரதேசத்தை அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்வதற்குத் தடை ஏற்பட்டது.

இந்தநிலையில் ஆலய உரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இப்பகுதியை துரிதமாக அபிவிருத்தி செய்யும் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச்செயலாளர் உமா மகேஸ்வரன் தெரிவித்தார். (ம-125)

# ஸ்மார்ட் நாடு உருவாகாது!

## அரசின் திட்டத்தை விளாசுகிறார் சஜித்

கொழும்பு, ஒக். 26

ஸ்மார்ட் நாட்டை உருவாக்கி வருவதாகக் கூறி, நாட்டின் சட்டத்தையும், அமைச்சரவைத்தீர்மானங்களையும் மீறி மின்கட்டணத்தை அதிகரிக்கும் செயற்பாட்டில் அரசு ஈடுபட்டுவருகின்றது. இதனால் ஸ்மார்ட் நாடொன்று உருவாகாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வடகொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சஜித் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஓராண்டில் முறைகேடாக 3 தடவைகள் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கட்டணங்களை அதிகரித்துவிட்டு, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் வீராப்புப் பேசி வருகிறார், எவ்வளவு தான் நீர்மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டாலும் 3 மாதங்களுக்கு ஒருமுறை மின்கட்டணத் திருத்தத்தை மேற்கொள்வதாக கூறுவதை அனுமதிக்கமுடியாது.

இது ஸ்மார்ட் நாட்டுக்கான பண்பல்ல. ஜனாதிபதி கூறும் ஸ்மார்ட் நாட்டில் விலை அதிகரிப்பும், விற்பனையுமே காணப்படுகின்றது. பில்லியன் கணக்கில் இலாபம் ஈட்டும் லிட்ரோ கேஸ் நிறுவனத்தைக் கூட விற்பதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது.

நாட்டின் தலைவர்களுக்கு மக்கள் மீதான உணர்திறன் இல்லை, நாட்டு மக்கள் அழுத்தத்துக்கு உள்ளாகும் போது, நாட்டின் ஜனாதிபதி மேலும் மேலும் விலைகளை அதிகரித்தும் சொத்துகளை விற்பனை செய்தும் நாட்டு மக்களைக் கொன்று குவித்து வருகிறார்.

நாட்டில் புத்திஜீவிகள் வெளியேற்றம் ஏற்பட்டுள்ள இவ்வேளையில், நாட்டுக்குத் துன்பங்களைத் தீர்க்கும் தலைமைத்துவம் தேவைப்படுகின்றது. இதற்குத் தேவையான அனைத்து வழிகாட்டல்களையும் வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது - என்றார். (ம-44)

# 2024ஆம் ஆண்டு முதல் தண்ணீருக்குச் சூத்திரம்

கொழும்பு, ஒக். 26

2024ஆம் ஆண்டு இறுதி வரை நீர்க்கட்டணங்கள் திருத்தப்படமாட்டாது என்றும், 2024 ஜனவரி முதல் நீர்க்கட்டண சூத்திரம் ஒன்றை அறிமுகப்படுத்த அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

'நீர்க்கட்டணம் தொடர்பில் பல்வேறு தவறான கருத்துகள் பரப்பப்படுகின்றன. நீர்க் கட்டணம் இதற்கு மேல் அதிகரிக்கப்படமாட்டாது. கடந்த ஓகஸ்ட் மாதம் நீர்க்கட்டணம் அதிகரிக்கப்பட்டாலும்கூட, குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் குறைந்தளவில் நீரைப் பயன்படுத்துபவர்களுக்கும் நீர்க்கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. மின்கட்டண அதிகரிப்பு உட்பட குடிநீர் சுத்திகரிப்புப் பணிகளுக்கான செலவுகள் அதிகரிப்பும் கடந்த காலங்களில் நீர்க்கட்டண அதிகரிப்பில் தாக்கம் செலுத்தியது. அடுத்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் நீர்க்கட்டண சூத்திரம் அறிமுகப்படுத்தப்படும்' என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-44)

# கறுப்புப் பட்டியலில் இருவர் பெயர் நீக்கம்

கொழும்பு, ஒக். 26

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவியதற்காக கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட இருவரின் பெயர் நீக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் இந்தத் தடைநீக்கம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 'ரமேஷ்' என்றழைக்கப்படும் நிக்லப்பிள்ளை அன்ரனி எமில் லக்ஸ்மிகாந்தன் மற்றும் முருகேசு ஸ்ரீ சண்முகராஜா ஆகியோரின் பெயர்களே கறுப்புப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. பயங்கரவாத நடவடிக்கைகளை ஆதரித்ததற்காக இருவரும் 2014ஆம் ஆண்டு முதல் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கடற்பரப்பில் கடும் மழை!

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்குத் திசையிலிருந்து அல்லது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 கிலோமீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும். (ம)

# டயானா மோதல் காட்சிகள் சபாநாயகரிடம் கையளிப்பு

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுஜித் பெரேராவுக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்ட மோதல் தொடர்பான சி.சி.ரி.வி. காட்சிகள் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற வாசிகசாலை வளாகம் அருகில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேரா தன்னைத் தாக்கியதாக கடந்த வெள்ளிக்கிழமை டயானா கமகே தெரிவித்திருந்தமை அரசியல் வட்டாரங்களில் பேசுபொருளாகியிருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் ஐவரடங்கிய குழுவொன்று சபாநாயகரால் நியமிக்கப்பட்டது. இந்தநிலையில் டயானா கமகே நாடாளுமன்ற வளாகத்தில் தாக்கப்பட்டமை குறித்த விசாரணைகளுக்கான சி.சி.ரி.வி. காட்சிகள் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ச-இ)

# இந்திய வம்சாவளியினர் அடையாளம் பேணலாம்

## பதிவாளர் நாயகம் ஒப்புதல்

கொழும்பு, ஒக். 26

பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழில் 'இந்திய வம்சாவளியினர்' என பதிவிடலாம் என்று பதிவாளர் நாயகம் எழுத்து மூலம் ஒப்புதல் அளித்துள்ளார்.

பிறப்பு, இறப்புச் சான்றிதழில் மலையக மக்கள் தமது இனத்தை 'இந்திய வம்சாவளியினர்' எனக் குறிப்பிடுவதை நீக்கி பதிவாளர் நாயக திணைக்களத்தால் சுற்றுநிருபம் முன்பதாக வெளியிடப்பட்டது.

இந்தச் சுற்றுநிருபத்துக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது.

இந்தநிலையில் மீண்டும் இந்திய வம்சாவளியினர் என்று பதிவிடலாம் என்ற ஒப்புதல் கடிதத்தை இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமானுக்கு எழுத்து மூலம் பதிவாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார். (ச-இ)

# பருவமழையை எதிர்கொள்வது தொடர்பான முன்னாயத்தம்

கிளிநொச்சி, ஒக். 26

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பருவமழையால் ஏற்படக்கூடிய இடர் நிலைமைகள் தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

பூநகரி பிரதேச செயலாளர் ரி.அகிலன் தலைமையில், பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. எதிர்வரும் பருவமழையின்போது ஏற்படக்கூடிய இடர் நிலைமைகள், மக்களைப் பாதுகாப்பதற்கான முன்னாயத்தச் செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் விரிவாக ஆராயப்பட்டது. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சின் செயலர்களை மாற்றவும் ரணில் வியூகம்

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

**கொழும்பு, ஒக். 26**

**வினைத்திறனின்றிச் செயற்படும் பல அமைச்சுகளின் செயலாளர்களை மாற்றம் செய்வது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தியுள்ளார் என்று அரச வட்டாரத் தகவல்கள் கசிந்துள்ளன.**

சுகாதார அமைச்சராகப் பணியாற்ற கெஹலிய ரம்புக்வெல மீது அண்மைக்காலமாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அதனையடுத்து அவர் அதிரடியாக மாற்றப்பட்டார்.

இதற்கு பெரமுனவினர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துவரும் நிலையில், அடுத்தகட்டமாக அமைச்சுகளின் செயலர்களை மாற்றுவதற்கும் ஜனாதிபதி ரணில் திட்டமிட்டுள்ளார் என்று தெரியவருகின்றது.

நாட்டைப் படிப்படியாக மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கையில், சமூக நலன்புரிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிக்காத அமைச்சின் செயலாளர்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு வினைத்திறனின்றிச் செயற்படும் அமைச்சுகளின் செயலாளர்கள் கண்டறியப்பட்டு அவர்களை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# மக்கள் நலனுக்காக அரசை எதிர்ப்போம்!

## ஆளும் பெரமுன கேலிக்கூத்து

கொழும்பு, ஒக். 26

நாட்டில் அரசியல் உறுதித்தன்மையை ஏற்படுத்துவதற்காகவே அரசியல் ரீதியில் பல தியாகங்களைப் பொதுஜன பெரமுன கட்சி செய்தது. எனினும், அரசால் மக்கள் நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்படாவிட்டால் அதற்கு எதிராகக் குரல் கொடுக்கும் உரிமை கட்சிக்கு உள்ளது என்று ஆளும் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் மின் கட்டணம் அதிகரித்துள்ளது. மக்களின் வாழ்க்கைச்சுமையும் அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் புதிய வரிகளை அறவிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பில் பங்காளிக்கட்சிகளுடன் கலந்துரையாடாமலேயே முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் பெரமுன மீதே குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது.

அமைச்சரவையை மறுசீரமைக்கும் உரிமை ஜனாதிபதிக்கு இருக்கின்றது. ஆனால் பதவி மாற்றங்களின்போது பங்காளிகளுடன் ஆலோசனை பெறுவது நல்லது. அதேபோல பதவியை மாற்றிவிட்டால் பிரச்சினை தீரும் என்ற எண்ணமும் தவறு. எனவே, பாதீட்டிலாவது மக்கள் நலத்திட்டங்கள் முன்வைக்கப்படவேண்டும் என ஜனாதிபதியிடம் கோருகின்றோம். சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தியே மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது என ஜனாதிபதி கூறினார். இதுபற்றி அவர் பங்காளிகளுடன் பேசவில்லை.

நாட்டில் அரசியல் உறுதித்தன்மையை ஏற்படுத்தவே நாம் தியாகங்களைச் செய்தோம். எதிர்காலத்திலும் செய்வோம். ஆனால் அதன் நன்மை மக்களைச் சென்றடையவேண்டும். மக்களுக்கு நன்மை பயக்காவிட்டால் அதற்கு எதிராகக் குரல் எழுப்பும் உரிமை எமக்கு உள்ளது. கூட்டணி அரசியல் உரிமையை ஜனாதிபதி மதித்து செயற்படுவார் என நம்புகின்றோம் - என்றார். (ம-44)

# சிறுமிகள் துஷ்பிரயோகம்; 168 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஒக். 26

இந்த ஆண்டின் செப்ரெம்பர் வரையான காலப் பகுதியில், 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீதான 168 பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்தாண்டின் செப்ரெம்பர் வரை 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீதான 168 பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 22 பேர் கர்ப்பமாக உள்ளனர். கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு செப்ரெம்பர் வரை பதிவான வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பை காட்டுகிறது- என்றார். (ச-இ)

# பச்சிலைப்பள்ளியில் டெங்கு ஒழிப்புத்திட்டம்

பளை, ஒக். 26

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு டெங்கைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் கிராம மக்களின் பங்களிப்புடன் சிரமதானப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தினரும் சுகாதார மருத் துவ அதிகாரி பணியகத்தினரும் இணைந்து ஏ-9 வீதியின் இருமருங்கும் இந்தச் சிரமதானப் பணிகளை முன்னெடுத்தனர். (ம-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்சி தினம் தெரியுமோ?

பேராசை பெருநட்டம் எண்டு எங்கட பழைய ஆக்கள் தெரியாமல் சொல்லேலை. இண்டைக்கு வரைக்கும் அவை சொன்னதெல்லாம் அப்பிடியே பலிச்சுக் கொண்டுதான் இருக்குது. 'சதுரங்க வேட்டை' எண்டொரு படம் கொஞ்சக்காலத்துக்கு முதல் வந்தது. அதில 'ஆரையும் ஏமாத்த வேணும் எண்டால் முதல்ல அவங்கட ஆசையைத் தூண்டவேணும்' எண்டொரு வசனம் வரும். அதெல்லாம் இப்ப அச்சொட்டா நடக்கத் தொடங்கியிருக்குது. எல்லாரும் இப்ப ஒட்சிசன் இல்லாமல்கூட இருப்பினம் ஆனால் கையில போன் இல்லாட்டி இருக்கமாட்டினம். அதால போனை வைச்சுத்தான் இப்ப வலைபோட்டுப் பிடிச்சு ஏமாத்திற வேலையள் அமளியா நடக்குது. அப்பிடி ஒரு ஏமாத்துத்தான் காசை வைச்சு விளையாடுற 'அப்ஸ்'.

இப்பிடியான 'அப்ஸை' நீங்கள் போனில டவுண் லோட் பண்ணினால், முதல்ல கொஞ்சக் காசு அவங்களே உங்களுக்குப் போடுவாங்கள். அப்பதானே உங்களுக்கு அந்த விளையாட்டில நம்பிக்கைவரும். அதைவிட நீங்கள் சேருற அந்த 'கேம்' நிறையப்பேர் விளையாடி, லட்சக்கணக்கில காசை எடுத்துக் கொண்டிருக்கிற மாதிரியும் காட்டும். 'இவ்வளவு பேர் லட்சாதிபதியான மாதிரி நாங்களும் லட்சாதிபதியாகலாம்' எண்ட ஆசை உங்களுக்கு 'ஓட்டமெட்டிக்கா' வந்திடும் . பிறகு கொஞ்சக்காசை உங்களைப் போடச் சொல்லி கேப்பினம். நீங்களும் முதல்ல காசு வந்த புளுகத்திலையும், நம்பிக்கையிலையும் காசைப் போடுவீங்கள். பிறகு உங்களை மாதிரி இன்னும் கொஞ்சப் பேருக்கு இந்த போன் 'கேம்' பற்றிச் சொல்லி அவையளையும் சேர்ப்பீங்கள். 'ஏனெண்டால் எவ்வளவுக்கு ஆக்கள் கூடுகினமோ அவ்வளவுக்கு காசு கூட வரும். அதுவும் உங்களுக்கு கீழ கனபேர் இருந்தால் உங்களுக்கு இப்ப கிடைக்கிற லாபத்தைவிட கன மடங்கு கூடும்' எண்டெல்லாம் இன்னும் ஆசைகாட்டக் காட்ட, நீங்களும் ஆக்களைச் சேர்ப்பீங்கள். நீங்கள் கட்டின காசைவிட கூடக் காசு உங்களுக்கு வந்துகொண்டே இருக்கும். தங்கமுட்டை போடுற வாத்து மாதிரி ஒவ்வொருநாளும் இப்பிடி காசு மழை பொழியிற 'கேமை' விட்டுட்டுப்போக ஆருக்குத் தான் மனம் வரும்?

ஒருகட்டத்தில எவ்வளவு கூட காசு போடுறீங்களோ அவ்வளவுக்கு உங்களுக்கு வாற காசும் மடங்குக் கணக்கில உடன தருவம் எண்டு அறிவிப்பினம். அதை நம்பி உங்களிட்ட இருக்கிறதையும், ஆக்களிட்ட கடன் வாங்கியும் காசை அள்ளிப் போடுவிங்கள். ஆனால் முந்தி வந்தமாதிரி உடன உங்கட எக்கவுண்டுக்கு காசு வராது. அந்த விளையாட்டில இருந்தே உங்களைத் தூக்கி இருப்பாங்கள். என்ன செய்தாலும் திரும்ப விளையாடவும் முடியாது, போட்ட காசும் வராது. அதோட பொலிஸில போய் முறைப்பாடும் செய்ய ஏலாது. இதால கனபேர் பாதிக்கப்பட்டு இருக்கினம். சிலர் உயிரைக்கூட விட்டிருக்கினம். வவுனியாவில ஒரு குடும்பமே இந்த போன் விளையாட்டில தான் இருக்கிற காசையும் துலைச்சு, ஊரில கடனாளியாகி, கடைசியில எல்லாரும் தூக்கில தொங்கினவை எண்டும் ஒரு கதை இருக்கு. காசுக்கு ஆசைப்பட்டு கடைசியா யமனிட்ட போய் விழாதையுங்கோ!

-பட்சி

padsi@uthayan.com

# அவுஸ்திரேலியா சாதனை வெற்றி



**அவுஸ்திரேலிய அணி நெதர்லாந்து அணியை நேற்றுப் பந்தாடி அபார வெற்றியைப் பதிவு செய்தது.**

டில்லி அருண் ஜெட்லி மைதானத்தில் அவுஸ்திரேலியா நெதர்லாந்து அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது. மிட்செல் மார்ஷ் விரைவாகவே வெளியேறி ஏமாற்றினாலும், வோர்னர், ஸ்மித் கூட்டணி நெதர்லாந்தை சிதறடித்தது. இருவரும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களைக் குவித்தனர். ஸ்மித் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

வோர்னர் சிறப்பாக ஆடி சதத்தைப் பூர்த்தி செய்தார். உலகக் கிண்ணத்தில் வோர்னரின் 6ஆவது சதம் இதுவாகும். இதன்மூலம் உலகக் கிண்ணத்தில் அதிக சதங்கள் அடித்தவர்கள் பட்டியலில் 6 சதங்கள் அடித்திருந்த சச்சினின் சாதனையை சமன்செய்தார்.

மார்னஸ் லபுசேன் 62 ஓட்டங்களுக்கும், வோர்னர் 104 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்த பின்னர், கிளென் மக்ஸ்வெல் அதிரடி காண்பித்தார்.

முதல் 7 பந்துகளில் 14 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்த மக்ஸ்வெல் அடுத்த 33 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார். உலகக் கிண்ண வரலாற்றில் அதிவேகமாக எடுக்கப்பட்ட சதம் இதுவாகும். நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க வீரர் மார்க்ரம் 49 பந்துகளில் எடுத்த சதமே உலகக் கிண்ண வரலாற்றில் அதிவேகமாக எடுக்கப்பட்ட சதமாக இருந்தது. அதனை 18 நாளில் முறியடித்தார் மக்ஸ்வெல். இறுதியில், 50 பந்துப் பரிமாற்றங்களில் அவுஸ்திரேலிய அணி 8 இலக்குகள் இழப்புக்கு 399 ஓட்டங்கள் குவித்தது. மக்ஸ்வெல் 44 பந்துகளில் 106 ஓட்டங்கள் எடுத்திருந்தார். நெதர்லாந்து தரப்பில் லோகன் வோன் பீக் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

400 ஓட்டங்கள் இலக்கை துரத்திய நெதர்லாந்து 90 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அந்த அணியின் முக்கியமான வீரர்கள் உட்பட யாரும் பெரிதளவு சோபிக்கவில்லை. அவுஸ்திரேலிய அணி தரப்பில் அடம் சம்பா 4 இலக்குகளை வீழ்த்தினார். மிட்செல் மார்ஷ் 2 இலக்குகளை வீழ்த்தினார். (ஏ-5)

## உதயனின் பரிசுக்குவியல்

**தினம் ஒரு பரிசு 22**

**இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இன்றைய (26.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ..............................................

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

தே.அ.இல : ..............................................

தொ.இலக்கம் : ..............................................

**மெகா பரிசு**

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ..............................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

விடை : ..............................................

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

தே.அ.இல : ..............................................

தொ.இலக்கம் : ..............................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

**இலங்கை** – **இங்கிலாந்து**

Sri Lanka Cricket

இடம் : பெங்களூர்

நேரம்: பி.ப. 2.00

ECB

# பாண்டியா விளையாடுவது தொடர்ந்தும் சந்தேகம்!

இந்திய அணியின் சகலதுறை வீரர் பாண்டியா அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் விளையாடுவது சந்தேகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்து - இந்தியா அணிகள் மோதிய ஆட்டத்தில், பந்தைத் தடுக்க முற்பட்டபோது பாண்டியா காயமடைந்தார். இதையடுத்து தொடர்ந்து விளையாட முடியாததால் அவர் அந்த ஆட்டத்தில் இருந்து வெளியேறினார். பாண்டியாவின் காலில் தசைக்கிழிவு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சிறிது காலம் ஓய்வில் இருக்க வேண்டியது அவசியம் என இந்திய கிரிக்கெட் அணியின் மருத்துவக் குழு தெரிவித்தது. இந்த நிலையிலேயே பாண்டியாவின் காயம் தொடர்பான மற்றைய அறிக்கை வெளிவந்துள்ளது. இதன்படி அவர் அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் விளையாட மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## தினம் ஒரு பரிசு நாள் 20 இன் வெற்றியாளர்கள்

| | |
|---|---|
| சு.ஸ்ரீவித்தியா | - தவசிகுளம் |
| சி.யர்சிகன் | - தொல்புரம் கிழக்கு |
| செ.பாலச்சந்திரன் | - சுழிபுரம் |
| கி.கிரிசாந் | - உக்குளாங்குளம் |
| மா.வருணபாலன் | - யாழ்ப்பாணம் |
| அ.நிக்ஷன் | - தென்னாபிரிக்கா |
| [illegible] | - [illegible] |
| [illegible] | - நெடுந்தீவு |
| செ.செல்வராசா | - காரைநகர் |
| ப.முரளிதரன் | - வண்ணார்பண்ணை |
| எ.அபிமன்யு | - உடுப்பிட்டி |
| கி.லயனல் | - குமளமுனை |
| சி.லித்தன் | - கள்ளப்பாடு |
| ஆ.ஆர்திகா | - வற்றாப்பளை |
| ஜி.ஜேன்ஸன் | - தாழ்வுபாடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எங்கே போனது நம்பிக்கை?

அமைச்சரவையில் சிறு மாற்றத்தைச் செய்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இந்த மாற்றத்தில் மிகமுக்கியமானது இதுவரை சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெல, அந்தப் பதவியில் இருந்து தூக்கப்பட்டு சுற்றாடல் அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. மருத்துவரான ரமேஷ் பத்திரணவுக்கு சுகாதார அமைச்சுப் பதவி கைமாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் சுகாதாரத்துறையினரால் கொடுக்கப்பட்டு வந்த நெருக்கடியில் இருந்து தற்காலிகமாகத் தப்பித்துள்ளார் ரணில். கெஹலிய ரம்புக்வெல ஒரு அமைச்சராக இருந்து பிரச்சினைகளைச் சுமுகமாகக் கையாளும் இயல்புடையவர் அல்லர். அவர் ஒரு தெருச்சண்டியர் போலவே எல்லா விடயங்களையும் அணுகுவதால், வலிந்து போய் பிரச்சினைகளை வாங்குவதில் வல்லவர். அதனால் அவர் வகித்த எல்லா அமைச்சுகளிலும் பிரச்சினைகளும், எதிர்ப்புகளும் தொடர்கதையான விடயங்களே.

கொரோனாப் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி என்பன இடைவெளியில்லாமல் இலங்கையை அடுத்தடுத்து தாக்கிப் புரட்டிப்போட்டதில், மிகப்பெரும் நெருக்குவாரங்களைச் சந்தித்தவற்றில் பிரதானமானது சுகாதாரத்துறையே. மருந்துத்தட்டுப்பாடு, நாட்டில் டொலரின்மையால் மருந்துகளை இறக்குமதி செய்யமுடியாத கையறு நிலை, போஷாக்கு குறைபாட்டால் நோயாளர் எண்ணிக்கையில் அதிகரித்த சடுதியான உயர்வு என்பனவெல்லாம் சுகாதாரத்துறையைத் திக்குமுக்காட வைத்தன. பல மருத்துவமனைகள் சத்திர சிகிச்சைகள் உள்ளிட்ட அவசர மருத்துவத்தேவையைக் கூட வழங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டன. சுகாதார நெருக்கடி, மருந்தின்மை காரணமாக மரணங்கள் கூட சம்பவித்தன. இந்த அவலநிலைக்கான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டிய சுகாதார அமைச்சு, அதனை விடுத்து பழியை மருத்துவர்கள் மீது போட்டது. 'மருத்துவமனைகள் என்றால் மரணங்கள் சம்பவிப்பது சாதாரணம் தான்' என்று ஓர் உலகமகா 'தத்துவம்' ஒன்றை உதிர்த்து மக்கள் மீதுள்ள தன் அக்கறையின்மையை வெளிப்படுத்தினார் கெஹலிய. ஒருகட்டத்தில் சுகாதார அமைச்சின் 'காட்டுத் தர்பாரால்' விரக்தியுற்ற மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தலைப்பட்டனர். அமைச்சருக்கு எதிரான போராட்டங்கள் வெடித்தன. அப்போதும் அந்தத்துறைக்குப் பொறுப்பான அமைச்சரான கெஹலிய கிஞ்சித்தும் இறங்கிவரவில்லை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கெஹலிய மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சி நாடாளுமன்றில் கொண்டுவந்தது. ஆனால் அந்தப் பிரேரணை ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவால் தோற்கடிக்கப்பட்டது. ஏனெனில் மஹிந்த குடும்பத்தின் அதிதிவிர விசுவாசிகளில் கெஹலியவும் ஒருவர். அதற்காக மட்டுமே கெஹலிய மீதான பிரேரணையை பொதுஜன பெரமுன தோற்கடித்ததே தவிர, அவரின் அமைச்சுத்துறை சார்ந்த செயற்பாடுகளின் மீதுள்ள நம்பிக்கையால் அல்ல, ஆனால் ரணில் பொதுஜன பெரமுனவின் முடிவையே தொடர்வாரானால், அடுத்தவருடம் நடத்துவதற்கு அவர் திட்டமிட்டிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் இந்த விடயம் பாரதூரமானதாக மாறலாம். சுகாதாரத் துறையின் சீர்கேட்டை எதிர்க்கட்சிகள் முன்னிலைப்படுத்தி பிரசாரத்தை மேற்கொண்டால், ரணில் பதவிக் கனவில் மண் விழுவது நிச்சயம். எனவேதான், தனக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொதுஜன பெரமுனவின் விருப்பத்துக்கும் மாறாக, கெஹலியவை சுகாதார அமைச்சுப் பதவியில் இருந்து ரணில் தூக்கியெறிந்துள்ளார். கூடவே பொதுஜன பெரமுனவை ஓரங்கட்டிவிட்டு, சுதந்திரக் கட்சியினருக்கு இந்த அமைச்சரவை மாற்றத்தில் ரணில் கொடுத்த முக்கியத்துவம் பெரமுனவுக்குள் பெரும் சலசலப்பை உண்டு பண்ணியிருக்கிறது. இதை பெரமுன கட்சியைச் சேர்ந்தோர் பகிரங்கமாகவே கூறியும் வருகின்றனர். இதனால் ரணில் - பெரமுன இடையேயான உறவில் விரிசல் வரலாம் எனவும், அது ரணிலின் அடுத்தமுறைக்கான ஜனாதிபதிக் கனவுக்கு ஆப்பு வைக்கலாமெனவும் சொல்லப்படுகின்றது. இப்படியான இடியப்பச் சிக்கலுக்குள் மாட்டுப்படாமல், எதிரணி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையிலேயே கெஹலியவின் பதவியைப் பலிகொடுத்திருக்கலாமே. அப்படிச்செய்திருந்தால் ரணில் மீதும், பெரமுன மீதும் மக்களுக்கு ஓரளவுக்காவது நம்பிக்கை வந்திருக்கும். ஆனால் அப்படிச் செய்யாமல் 'எங்களுக்கு கெஹலிய மீது நம்பிக்கை உள்ளது. அவர் செய்வது சரி' என அப்போது முழங்கிவிட்டு, இப்போது அவரை அந்த அமைச்சுப் பதவியில் இருந்து அகற்றியதன் மூலம் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சரி என்பதைத்தானே ரணிலும் உறுதி செய்திருக்கிறார். இதைவிட பருத்திமூடை 'குடோனிலேயே' இருந்திருக்கலாமே.

### நாளொரு நல்வார்த்தை

"அன்பு நிறைந்த பெண்ணிடம் காதல் கொள்வது ஒரு மனிதனை மறுபடியும் மனிதனாக்குகிறது."
-மார்க்ஸ்-




# பொலிஸ் காவலில் உயிரிழப்பு; விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஒக். 26

இலங்கையில் கடந்தகாலங்களில் பொலிஸ் காவலில் இருந்த பல சந்தேகநபர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸாரால் கைதுசெய்யப்படும் சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு முன்னர் குற்றவாளியென சட்டரீதியாக நிரூபிக்கப்படாததால் அவர்களைக் குற்றவாளி போல் நடத்தமுடியாது.

இலங்கையில் கடந்த காலங்களில் பொலிஸ் காவலில் இருக்கும்போது சந்தேகநபர்கள் உயிரிழந்த 20க்கும் மேற்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. குறிப்பாக மலையகத்தைச் சேர்ந்த இராஜகுமாரி என்ற பெண் பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அதேவேளை பொலிஸாரின் சித்திரவதைகள் தாங்க முடியாமல் கைதானவர்கள் தமது உயிரை மாய்த்துக்கொள்ள முற்படுகின்றனர் என்றும் மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவ்வாறான தொரு பின்புலத்திலேயே மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது- என்றார். (ச-44)

## ஜனாதிபதியின் பாதீடு பெரமுன காத்திருப்பு!

### நாமல் தெரிவிப்பு

ஜனாதிபதியால் முன்வைக்கப்படும் பாதீடு எவ்வாறு அமையும் என்பதற்காகவே நாம் காத்திருக்கின்றோம். நாட்டை முன்னேற்றுவதற்காக 2048 ஆம் ஆண்டுவரை நாட்டுமக்களைக் காத்திருக்க வைக்கமுடியாது.

- இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமது பிள்ளைகளுக்குச் சிறந்த உணவை வழங்க 2030ஆம் ஆண்டுவரை மக்கள் காத்திருக்க முடியாது. அப்படியானால் அரசு எதற்கு? வரவு-செலவுத் திட்டத்தில் எவ்வாறான விடயங்களை ஜனாதிபதி முன்வைக்கின்றார் என்பதற்காகவே நாம் காத்திருக்கிறோம். பாதீடு முன்வைக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தி முடிவொன்று எடுக்கப்படும் - என்றார். (ச-44)

## யாழ். போதனாவுக்குள் போதையில் அட்டகாசம்

### இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் மதுபோதையில் அட்டகாசம் மேற்கொண்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. நோயாளி ஒருவரை பார்வையிடுவதற்காக மருத்துவமனை வளாகத்துக்குள் நுழைந்தவர்கள் போதையில் பாதுகாப்பு ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். விடயம் தொடர்பில் மருத்துவமனைப் பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவலளிக்கப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டனர். (ம-125)

**நாளை** 27.10.2023 வெள்ளிக்கிழமை ஐப்பசி 10

சுபநேரம் : 06.03 - 07.33
ராகுகாலம் : 10.33 - 12.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியின் முதலாவது இலத்திரனியல் நூலகம்

## பூநகரியில் திறப்பு

கிளிநொச்சி, ஒக். 26

பூநகரி பிரதேசசபை பொது நூலகத்தில் வன்னியின் முதலாவது இலத்திரனியல் நூலகம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இந்த இலத்திரனியல் நூலகத்தை உத்தியோகபூர்வமாக மக்கள் பயன்பாட்டுக்குக் கையளித்தார்.

இணைய வசதியுடன் கூடியதும் சலுகையுடன் அச்சிடும் வசதிகளைக் கொண்டதுமாக இந்த இலத்திரனியல் நூலகம் உருவாக்கப்பட்டுள்ளது. இலவச கணினி மையத்துடன் கூடிய இந்த நூலகம் மாணவர்கள் மற்றும் வேலையற்ற இளைஞர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)


## மேல்வீடு வாடகைக்குண்டு

பிரதான வீதி, பஸ்தியான் சந்திக்கு அண்மையில் வீட்டின் மேல் தளம் வாடகைக்கு உண்டு. 03 அறைகள், 02 வரவேற்பறை, சமையலறை, குளியல் அறையுடன் இணைந்த கழிப்பறையுடன் கூடியது. மருத்துவ பீட மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 4435 414

## மணமகள் தேவை

29 வயது உடைய கடகராசி
பூச நட்சத்திரம் விவாகரத்தான
மணமகனிற்கு மணமகள் தேவை.
தொழில் மேசன் (Boos)

077 028 5289


## மரண அறிவித்தல்

### திருமதி அரியமலர் மனோகரன்



மண்ணில் 06.12.1941 — விண்ணில் 23.10.2023

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை புலோலி மேற்கு, கிராமக் கோட்டடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி அரியமலர் மனோகரன் அவர்கள் 23.10. 2023 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், அமரர் முருகேசு மனோகரனின் அன்பு மனைவியும், ஆனந்தகதிரமலை, ஆனந்தகுமாரதாஸ், ஆனந்த பாமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தமணி மனோன்மணி, சுந்தரராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், முருகதாஸ், சுமதி.தயானந்தன் (பெறாமகன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மப்பிரபா, கிருபாரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிஸின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2023) வியாழக்கிழமை மு.ப.-10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

'கதிரமலை வாசம்'
புலோலி மேற்கு, கிராமக்கோடு.

தகவல்: குடும்பத்தினர்.
மகன் - முருகதாஸ்
மகள் - சுமதி
பெறாமகன் தயானந்தன்
077 344 3034

(CS 26719)A-1

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு

## மீள்கேள்வி அறிவித்தல் - 2024

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2024 இலிருந்து 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் | :- | 26.10.2023 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 07.11.2023 பிற்பகல் 14.00 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்) |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | :- | 07.11.2023 பி.ப 02.00 மணிவரை |
| கேள்வி திறக்கப்படும் திகதி | :- | 07.11.2023 பி.ப 02.00 மணி |

| — | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த மீள்கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **புதுக்குடியிருப்பு உப அலுவலகம்.** | | | |
| 1 | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 19,000.00 | 376,000.00 |
| 2 | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 17,000.00 | 333,500.00 |
| 3 | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 3,000.00 | 51,298.36 |
| 4 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை இல-02) | 2,000.00 | 2,000.00 | 23,563.63 |
| 5 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 7,000.00 | 133,000.00 |
| 6 | புதுக்குடியிருப்பு சிறுவர் பூங்கா | 2,000.00 | 2,000.00 | 25,000.00 |
| 7 | புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி பொது மலசலகூடம் | 2,000.00 | 2,000.00 | 13,388.72 |
| 8 | கைவேலி மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 46,000.00 | 909,090.90 |
| 9 | கைவேலி கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 32,000.00 | 636,363.63 |
| 10 | கைவேலி பன்றி இறைச்சிக்கடை( வளர்ப்புப் பன்றி) | 2,000.00 | 18,000.00 | 363,636.36 |
| | **ஒட்டுசுட்டான் உப அலுவலகம்.** | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 2,000.00 | 44,000.00 |
| 2 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 3,000.00 | 53,000.00 |
| 3 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 2,000.00 | 42,000.00 |
| 4 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 28,000.00 | 560,000.00 |
| 5 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 18,000.00 | 350,000.00 |
| 6 | கற்சிலைமடு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 6,000.00 | 113,989.09 |
| 7 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை (இல-01) | 2,000.00 | 1,000.00 | 2,300.00 |
| 8 | ஒட்டுசுட்டான் ஆட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 1,000.00 | 20,081.82 |
| | **ஒலுமடு உப அலுவலகம்.** | | | |
| 1 | மாங்குளம் பொதுச்சந்தை | 2,000.00 | 15,000.00 | 303,000.00 |
| 2 | மாங்குளம் மாட்டிறைச்சிகடை | 2,000.00 | 2,000.00 | 28,000.00 |
| 3 | மாங்குளம் கருவாட்டுக்கடை | 2,000.00 | 1,000.00 | 2,061.82 |

### நிபந்தனைகள்:

1. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேச்சபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும்.
2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2023.11.13 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை 6 சம பங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அம் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னைய வேலைநாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஏனைய நிபந்தனைகள் தொடர்பான மேலதிக விபரங்களை 05.10.2023 அன்றைய தின உதயன் பத்திரிகையில் பார்வையிடவும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**
**2023.10.26.**
**தொலைபேசி இல- 021 229 1023**
**email-pktpsmullai@gmail.com.**

N.1

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவில் கவனமாக இருக்கவும். குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடியுங்கள். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி கிட்டும்.

**மிதுனம்:** உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்ததைவிட லாபம் குறைவு. அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்னைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற் படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். சங்கடங்கள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பணியாளர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கவும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. விருப்பம் நிறைவேறும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும். வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்த வாய்ப்பு உண்டு. சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராய் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

மேற்படி சங்க பொதுக்கூட்டம் 29.10.2023
அன்று ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.30 மணிக்கு
கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்
சகல அங்கத்தவர்களையும்
தவறாது சமுகம் அளிக்கும் வண்ணம்
கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் செயலாளர்

(cr 40835 (AK.1)



உ
சிவமயம்

## வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலன சபை

## வருடாந்த பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

மேற்படி ஆலயத்தின் **2023 - 2024** ஆம் நிதியாண்டின் பரிபாலன சபை தெரிவிற்கான பொதுக்கூட்டம் **எதிர்வரும் (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.** பொதுகூட்டத்திகதி பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இதனால் பொதுச்சபை அங்கத்தவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

க.கந்தாசமி (தலைவர்) | பரிபாலன சபை சார்பில் 25.10.2023 | CM.வரதராஜா (செயலாளர்)

(CS 52623)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.09.1959
மறைவு 10.11.2019

### அமரர் சண்முகநாதன் கருணாகரன்
(கண்ணன் பத்தர்)

திதி : திரயோதசி

ஆண்டுகள் நான்கு கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம் குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்.

**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

குடும்பத்தினர்
தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.


## துணுக்காய் பிரதேசசபை
## 2024 ஆம் ஆண்டிற்கான மீள்கேள்வி அறிவித்தல்

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தை, ஆட்டிறைச்சிக்கடைகள், மாட்டிறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01.01.2024 தொடக்கம் 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்** :- 26.10.2023 –09.11.2023 (அலுவலக நாட்களில் மு.ப8.30 - பி.ப 3.00வரை)
**கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி** :- 09.11.2023 பி.ப 12.30 மணிவரை
**கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி** :- 09.11.2023 பி.ப 01.00 மணி வரை
**கேள்வி திறக்கப்படும் திகதி** :- 09.11.2023 பி.ப 2.00 மணி
**கேள்வி திறக்கும் இடம்** :- **துணுக்காய் பிரதேசசபை அலுவலகம்**

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**இறைச்சிக்கடை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 25,476.00 | 1,500.00 | 500 |
| 2 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 258,446.00 | 2,500.00 | 500 |
| 3 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 35,000.00 | 1,500.00 | 500 |
| 4 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 64,000.00 | 1,500.00 | 500 |
| 5 | மாட்டிறைச்சிக் கடை | மல்லாவி | 1,833,353.00 | 2,500.00 | 500 |
| 7 | ஆட்டிறைச்சிக்கடை | ஐயன்கன்குளம் | 15,378.00 | 1,500.00 | 500 |
| 8 | மாட்டிறைச்சிக் கடை | ஐயன்கன்குளம் | 132,788.00 | 2,500.00 | 500 |
| 9 | கோழி இறைச்சிக்கடை | ஐயன்கன்குளம் | 25,100.00 | 1,500.00 | 500 |

**பொதுசந்தை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | துணுக்காய் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 29,791.00 | 1,500.00 | 500 |
| 2 | ஐயன்கன்குளம் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | ஐயன்கன் குளம் | 29,282.00 | 1,500.00 | 500 |
| 3 | மல்லாவி பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும | மல்லாவி | 1,501,800 | 1,500.00 | 500 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் இலங்கை பிரஜையாகவும் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கக்கூடியவராகவும் சான்றுகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்விகோர தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபை தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வி தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
4. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
5. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
6. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
7. இறைச்சிக்காக ஆடு, மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
8. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
9. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்

அ.பாலகிருபன்
செயலாளர்
பிரதேசசபை,
துணுக்காய்.


## மரண அறிவித்தல்
## பத்தன் சின்னமணி



பிறப்பு 15.01.1933 இறப்பு 23.10.2023

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கட்டுடையினை வசிப்பிடமாகவும் கொண்ட பத்தன் சின்னமணி கடந்த (23.10.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று (26.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
கட்டுடை,
மானிப்பாய்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளை,
076 642 7104, 077 841 4323,
078 558 9879

(க. 36750) (K-1)



## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் செல்லத்துரை கணநாதன்



**திதி: புரட்டாதி மாத பூர்வபக்க துவாதசி**

மண்ணில் மதிப்போடு மலர்ந்திட்ட தந்தையே
கண்ணில் நின்று நித்தம் காட்சி தருகின்றீர்கள்
ஆண்டுகள் ஒன்பது ஓடி மறைந்திட்டாலும்
உங்கள் திருமுகம் எம்மை விட்டு மறையுமோ
தேசம் விட்டு நீங்கள் மறைந்திட்டாலும்
என்றும் எங்கள் மனங்களில் வாழ்கின்றீர்கள்.

**உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்**

தர்மகிரி அம்மன்கோயிலடி,
[illegible]
அராலி

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

மண்ணில் 11.07.1950
விண்ணில் 05.10.2014


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 19 • 11 • 1933



இறப்பு 06 • 11 • 2022

கடந்த (06.11.2022) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## திருமதி சுப்பையா சிவபாக்கியம்

புன்முறுவல் பூத்த முகம்
பூரிப்புக் கொண்டவுள்ளம்
என்றுமே இனிமையுடன் எல்லோரையும்
கவர்ந்தவளல்லவோ அம்மா நீ!
எம்மை பெற்றெடுத்து வாழ்வின் வழிகாட்டியாய்
எம்மை பாசத்தோடு வளர்த்து விட்டீர்கள்
மூப்பின் பிணி காரணமாக எம்மைவிட்டு
பிரிந்து ஒரு வருடமாகிவிட்டதம்மா
எம்மை விட்டு பிரிந்தாலும் உங்களை
நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து எம் இதயத்தில்
வைத்து பூசித்து வணங்குகின்றோம் அம்மா!
நீங்களும் நிச்சயம் எம்முடன் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள்
என நம்புகின்றோம்.

அன்னாரின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு 26.10.2023 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**இல. 03, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(cs.52612) (N.1)

உங்கள் அமைதி வேண்டிப் பிரார்த்திக்கும்
பிள்ளைகள் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 • 03 • 1943



மறைவு 24 • 10 • 2023

## திருமதி கைலேஸ்வரி பாலசிங்கம்

572 / 8 "கைலை வாசா" கலட்டி அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கைலேஸ்வரி பாலசிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (24.10.2023) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசிவாபிள்ளை (ஓவசியர்) கனகாம்பிகை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், கொல்லங்கலட்டி தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற திரு.பொன்னையா பாலசிங்கம் (ஓய்வு பெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்) அவர்களின் அன்பு மனைவியும், கைலை நந்தினி, கலாநிதி ராஜநந்தனன் (உதவிப் பணிப்பாளர், Cell Cart BioScience U.K), செந்தில் நந்தனன் (முன்னாள் மேலதிக செயலாளர், தொழில் அமைச்சு கொழும்பு), பிரசாந்தனன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை திணைக்களம் வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிவபாலசிங்கம் (பொறியியலாளர்), மற்றும் லோகேஸ்வரி (விஞ்ஞானி, பொதுச்சுகாதாரத்துறை, U.K) பேராசிரியர் மீனா (இரசாயனவியற்துறை யாழ். பல்கலைக்கழகம்) ராகினி (ஆசிரியர், யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தேவதாஸ், ஜெகதீஸ்வரன், நகுலேஸ்வரன் (கனடா), ஆத்மநாதன், காலஞ்சென்றவர்களான ரவீந்திரதாஸ், பன்னீர்ச்செல்வன் மற்றும் குகநேசன் (பிரான்ஸ்), கதிர்காமநேசன், வாசுகி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாயீசன் (நீதி அமைச்சு, கொழும்பு), விசாகேசன் (U.K), Dr. அஸ்வினி (U.K), அபிராம் (மருத்துவ பீட மாணவன்,U.K), அகனீதா (மாணவி பேராதனை பல்கலைக்கழகம்), சுவஸ்திகன் (மாணவன் யாழ். இந்துக்கல்லூரி), Dr. தேவிகா (L.R.HOSPITAL, கொழும்பு), Dr.வாகினி (U.K), ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அத்வைதாவின் (புனித பிச்சட் கன்னியர்மடம் பாடசாலை, கொழும்பு) அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**572 / 8 "கைலை வாசா"**
**கலட்டி அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(cs.52617) (AK.1)

தகவல்:
**குடும்பத்தினர்**
செந்தில் நந்தனன் - 077 470 2251
பிரசாந்தனன் - 077 652 0452

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 • 12 • 1942



மறைவு 21 • 10 • 2023

## கந்தையா யோகநாதன்
### (முன்னாள் இ.போ.ச உத்தியோகத்தர்)

கரவெட்டி, கிழவிதோட்டத்தை பிறப்பிடமாகவும், கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா யோகநாதன் (முன்னாள் இ.போ.ச உத்தியோகத்தர்) கடந்த (21.10.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பசுபதி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், புஸ்பராணி யின் கணவரும், மதுராந்தகன் (பிரித்தானியா), முரளி, ஆர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், மகிமா, ஹேமசியா, சிவகுமார் ஆகியோரின் மாமனாரும், செல்வமலர் (ஓய்வு பெற்ற ஆசிரியை - கிழவித் தோட்டம்), யோகமலர் (கிழவித் தோட்டம்), வைத்தியநாதன் (முன்னாள் - பிரதேசசபை உறுப்பினர் - கரவெட்டி), புஸ்பமலர் (பிரித்தானியா) ஆகியோரின் சகோதரனும், மாறன், மிதுன், ஆதித், ஆத்விக் ஆகியோரின் தாத்தாவும், காலஞ்சென்ற மகேந்திரராஜா, மற்றும் மகேஸ்வரராஜா (ஓய்வுபெற்ற அதிபர்), புஸ்பேந்திரா (ஓய்வுபெற்ற திட்டமிடல் பணிப்பாளர் - திருகோணமலை), சிவானந்தம் (கிழவித்தோட்டம்), தமயந்திதேவி, ரஞ்சினி, ஜெராட் (திருகோணமலை) காலஞ்சென்ற சத்தியகிரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**கலட்டி வீதி,**
**கரணவாய் கிழக்கு, கரவெட்டி.**

(cr.40823) (N.1)

தகவல்: குடும்பத்தினர்
077 181 6039

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 - 11 - 1941



இறப்பு 23 - 10 - 2023

## திருமதி வசந்தா ஹரிச்சந்திரா

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தா ஹரிச்சந்திரா கடந்த (23.10.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சி.நாகலிங்கம் தங்கமுத்தம்மா ஆகியோரின் மகளும், காலஞ்சென்றவர்களான பொன் பாலசுந்தரம், இராசநாயகி ஆகியோரின் அன்பு மருமகளும், திரு. பாலசுந்தரம் ஹரிச்சந்திரா அவர்களின் அன்பு மனைவியும், தனுஷன், உதயா ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகினி, ரகு ஆகியோரின் அன்பு மாமியாரும், இஷானா, கிஷான் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், சக்திவேல், கருணைவேல், பிரேமா, தர்மினி, பத்மினி, ரவீந்திரன், துஷ்யந்தன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சறோஜினி, கமலலோஜினி மற்றும் மீனலோஜினி, பிமலலோஜினி, ஜயசந்திரன், பத்மலோஜினி, ஞானசந்திரன், பாலச்சந்திரன், ராமசந்திரன், யோகசந்திரா, காலஞ்சென்ற பிரேமசந்திரா மற்றும் சிலௌஜினி ஆகியோரின் அன்பு மைத்தினுயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2023) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் இல.483, பௌத்தலோக மாவத்தை கொழும்பு 8இல் அமைந்துள்ள ஜெயரட்ண மலர்ச் சாலையில் இடம்பெற்று முற்பகல் 10.30 மணியளவில் பொறளை கனத்தை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

**தொடர்பு :**
**074 136 2587, 077 035 0958**

cs.52569 (Ak.1)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட தரத்துக்குத் தெரிவானார் சிறி



யாழ்ப்பாணம், ஒக். 26

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிறி. தெரிவாகியுள்ளார். பொதுச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு அமைய 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு அவருக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது. (அ-ஓ-26)

## அமெரிக்கத் தூதரகத்துக்கு சென்று திரும்பிய முதியவரைக் காணோம்

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணத்திலிருந்து விசா அலுவல்கள் நிமித்தம் கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்துக்குச்சென்று அலுவல்களை நிறைவு செய்து விட்டுத் திரும்பிய முதியவரை கடந்த 23 ஆம் திகதி முதல் காணவில்லை என உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி ஆட்டுப்பட்டித் தெருவிலுள்ள விடுதிக்கு உறவினர்களுடன்திரும்பிய முதியவர் அன்று பிற்பகல் 3 மணியளவில் கடைக்குச் செல்வதாகத் தெரிவித்து விடுதியிலிருந்து புறப்பட்டுச் சென்றதாகவும் அதன்பின்னர் அவரைக் காணவில்லை என்றும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-125213)

# இ.போ.ச. சாரதி மீது முல்லையில் தாக்குதல்

முல்லைத்தீவு, ஒக். 26

முல்லைத்தீவு, சிலாவத்தையில் பயணிகளை ஏற்றிக்கொண்டு நின்றிருந்த இ.போ.ச. சாரதி மீது ஹைஏஸ் வாகனத்தில் வந்த நபர் தாக்கியதாகத் தெரிவித்து சாரதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவிலிருந்து சிலாவத்தை ஊடாக மாங்குளம் நோக்கி நேற்றுமுன்தினம் மாலை சென்று கொண்டிருந்த பேருந்து சிலாவத்தையில் பயணிகளை ஏற்றிக்கொண்டு நின்றிருந்தது. அந்நேரம் இ.போ.ச. பேருந்தை நெருங்கிய 'ஹைஏஸ்' வாகனத்தில் வந்த நபர் இ.போ.ச. சாரதி மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளார்.

இதையடுத்து தாக்கப்பட்டவர் நேற்றுமுன்தினம் இரவு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸாரிடம் முறைப்பாடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இதுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை. 'ஹைஏஸ்'வாகனத்தின் இலக்கம் வழங்கப்பட்டுள்ள நிலையில் அதனோடு சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஓ-19)

# கிராமமக்கள் பிரச்சினை; வெளிக்கொணர 'ஜனசபை'

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் கிராமங்களிலுள்ள மக்களின் பிரச்சினை களை வெளிக்கொண்டுவரும் முகமாக புதுக்குடி யிருப்பில் 'ஜனசபை' செயற்குழு முதலாவதாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.**

இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்புப் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கிழக்கு கிராமஅலுவலர் பிரிவு களிலுள்ள அமைப்புகள், ஏனைய இளைஞர், யுவதிகள் ஆகியோரை உள்வாங்கி 'ஜனசபா' செயற்குழுவுக்கு 25 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதேபோன்று ஏனைய மாவட்டங்களிலும் 'ஜனசபா' செயற்குழு தெரிவு செய்யப்படவுள்ளது.

இந்த 'ஜனசபா' செயற்குழு கிராமங்களில் போதைப்பொருள்பாவனை, வீதிகள் சீரின்மை, காணிப்பிரச்சினைகள் உள்ளிட்ட மக்கள் பிரச்சினைகளை வெளிக்கொணர முன்னின்று செயற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. நிகழ்வில் முல்லைமாவட்டச்செயலர் அ.உமாமகேஸ்வரன், மேலதிக மாவட்டச்செயலர் எஸ்.குணபாலன், மேலதிக மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன், பொது அமைப்புகளின் பிரதிநிதி கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-19)

# வீட்டில் திடீரென மயங்கிய கிராமஅலுவலர் உயிரிழப்பு!



வடமராட்சி, தொண்டைமானாறு பிரதேசத்தில் வீட்டில் மயங்கி விழுந்த கிராம அலுவலர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறைச் சேர்ந்த துதியான் சாந்தரூபன் (வயது- 59) என்ற வல்வெட்டி மத்தியில் கடமைபுரியும் கிராம அலுவலரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வீட்டில் மயங்கி விழுந்த நிலையில் உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழப்புத் தொடர்பில் பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ஓ-26-100)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 . 04 . 1940

மறைவு 06 . 11 . 2022

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும், நல்லூர் சிவன் புதுவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் நவரட்ணம் கனகம்மா**

ஓராண்டு ஆனால் என்ன
ஓராயிரம் ஆண்டுகள் ஆனால் என்ன
உங்கள் நினைவுகள் என்றும்
எங்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும்
வலிகளை சுமந்து தனிமையில் அழுகின்றோம்
நினைவுகள் வருகையில் நிலைகுலைந்து நிற்கின்றோம்
மாறாத துயரினைத் தந்து மீளாத்துயில் கொண்ட
எம் அன்பு தெய்வமே! உருவாய் இல்லை என்றாலும்
தெய்வமாய் எங்களுடனே என்றும்
வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

62, சிவன் புதுவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## விழி நீர் அஞ்சலி/ துயர் பகிர்வு



மண்ணில் உதயம் 18 . 06 . 1952

விண்ணில் மறைவு 25 . 10 . 2023

**அமரர் கதிரேசு செவ்வந்திநாதன்**

பிறப்பிடம் - அரியாலை, யாழ்ப்பாணம்
வசிப்பிடம் - (பிரான்ஸ்)

துயர் தந்து துயில் கொள்ளும் தூயவரே !
தூரத்தில் இருந்தாலும் துணிவூட்டும் அன்புறவே

பாதியிலே எம்மை தவிக்கவிட்டு பறந்ததென்ன அவசரமாய்
மீதிவரை உம் நினைவோடு மீண்டிடுவோம் வையகத்தில்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

இதயத்தின் வலிகளோடும் உங்கள் நினைவுகளோடும்

செல்லர் பாலசிங்கம் குடும்பத்தினர்.
(நேசன் - விக்னா)

(CS 26722) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 06 . 1944



மறைவு 23 . 10 . 2023

## தங்கராஜா தவமணிதேவி

உரும்பிராய் மேற்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா தவமணிதேவி கடந்த (23.10.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகர் அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ் சென்றவர்களான சின்னத்துரை சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னராசா மற்றும் தியாகராசா, நடராசா, துரைராசா, சாரதாமணிதேவி, செல்வராசா, மனோன்மணிதேவி, கனகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசகிளி, காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் சந்திரகலா, ஜோர்ஜ், மொறின், தவராசா, யோகராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தாவடியிலுள்ள கல்வாரி பூரண சுவிசேஷ சபையின் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: **077 316 4431**

(CS 26718) A-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 06 . 1957



இறப்பு 24 . 10 . 2023

## தவஅருட்கரசி கந்தசாமி

யாழ். கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தவஅருட்கரசி கந்தசாமி அவர்கள் கடந்த (24.10.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (ஆசைப்பிள்ளை) ஆயிலியம் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தம்பிஐயா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற திருஅருட்கரசி, சிவகுமாரன் (கோண்டாவில்), ஞானஅருட்கரசி (ஜேர்மனி), சம்பந்தன் (லண்டன்), ஶ்ரீகணேசன் (ஜேர்மனி), பிரபு (லண்டன்) அவர்களின் சகோதரியும் கருணாகரன், மின்னல்கொடி, சிவபாலன், கவிதா, தாட்சாயினி, மைதிலி ஆகியோரின் அன்பு மைத்துனியும், முருகையா, பரமேஸ்வரன், மகாலட்சுமி, கனகலட்சுமி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுகொள்ளுகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26716) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 09 . 1949



மறைவு 24 . 10 . 2023

## திருமதி மகேஸ்வரி தனபாலசிங்கம்

நீர்வேலி மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் மகேஸ்வரி அவர்கள் கடந்த (24.10.2023) செவ்வாய்க் கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் தனபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், முத்துக்குமாரன் நாகம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற இலங்கைவிநாயகம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற லோகநாயகி, லோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், முருகதாசன் (கைதடி), ஜெயரூபா (கனடா), சிகரூபா (அவுஸ்திரேலியா), கோகுலதாசன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவஜீவா, தீபரஞ்சன், உமாசங்கர், நிவேதா ஆகியோரின் அன்பு மாமியாரும், கேசலி, கேசவன், கேதுசன், வைஷ்ணவி, வைஷ்ணவன், பிரணவி, கர்ணீஷ், விஷ்னு, அருட்குமரன், அபிஷ்ணா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற வரதன், ருக்மணி, சோதிமலர், குமுதினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.
021 205 4820

தகவல்:
மகன் முருகதாசன் (கைதடி)
075 390 4900

# மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 05 . 1945



இறப்பு 25 . 10 . 2023

## திருமதி செங்கமலம் சோமசுந்தரம்

அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செங்கமலம் சோமசுந்தரம் நேற்று (25.10.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சுப்பையா தங்கமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான இலங்கை காவலர் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் தங்கரத்தினம், அமரர் அன்னலட்சுமி, அமரர் நாகரத்தினம், அமரர் கனகரத்தினம், அமரர் தம்பிராசா, அமரர் மல்லிகாதேவி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகேஸ்வரி, குகதாஸ், நரேந்திரன், மோகனதாஸ் (ஜேர்மனி), கோணேஸ்வரன், அருள்தேவி, ரதிதேவி, கீதா, கிருஸ்ணராசன் துஷ்யந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவராசா, ஶ்ரீதர்சினி, வாலேஸ்வரி, சுதனி (ஜேர்மனி), காஞ்சனா, முகுந்தன், அன்பழகன், விஜயகுமார், கவிதா, மதிசுதன் ஆகியோரின் மாமியாரும், குகசீலன், சயனி, நரேஸ், தர்மிகா, நிக்ஸ்சன், மகிந்தன், தேனுயா, மதுசியன், அக்ஷனா (ஜேர்மனி), அபிநாஸ் (ஜேர்மனி), சங்கீர்த்தனா, நிதுர்சனா, பவித்திரா, அபிநயா, பானுகா, நிலாஞ்சலி, அபிசேக்ராஜ், மிதுர்சன், சங்கீர்த்தனன், சஜீபன், சோபிகன், ஜசிந்தன், கம்சிகன், அபிசயன், லதுர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2023) வியாழக்கிழமை பி:ப 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுகொள்ளுகிறோம்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்.
T.P.No:021 221 5638

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில்...

சர்சைக்குரிய சீனாவின் ஆய்வுக் கப்பல், ஒருமாத காலத்துக்கும் மேலாக இந்து சமுத்திரத்தில் இருந்ததுடன், கொழும்புத் துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது. கொழும்புத் துறைமுகத்தின் எஸ்.ஏ.முனையத்தில் அது நங்கூரமிட்டுள்ளது.

கடந்த மாதம் 11 ஆம் திகதி குவென்ஷோ துறைமுகத்திலிருந்து புறப்பட்ட சீன ஆய்வுக் கப்பல், கடந்த மாதம் 19ஆம் திகதி இந்து சமுத்திரத்துக்குள் பிரவேசித்தது.

இந்தியா தீவிர கவனம் செலுத்தியதால், கப்பல் பயணத்தின் ஆரம்பம் முதல் பல சர்ச்சைகள் ஏற்பட்டன.

கப்பலின் இலங்கைக்கான பயணம் ஒக்ரோபர் 25ஆம் திகதி இடம்பெறும் எனகடந்த ஓகஸ்ட் மாதம் சீனாவிலிருந்து கப்பல் புறப்படுவதற்கு முன்னரே கடற்படையினர் அறிவித்திருந்தனர். எனினும், உயர்மட்ட இராஜதந்திரிகளுக்கு இந்தியா வழங்கிய பதில் நடவடிக்கைகளால், சீன ஆராய்ச்சிக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு வருவது தாமதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை - சீனக் கப்பல் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கடந்த மாதம் 25ஆம் திகதி நியூயோர்க்கில் தெரிவித்திருந்தார்.

ஆயினும், திட்டமிட்ட தினத்திலேயே சீனாவின் ஆய்வுக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்துள்ளது. (அ-ஒ-இ)

## சி.ஐ.டி...

'பயங்கரவாதத்' தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது என்ற தகவல் அம்பலமாகியுள்ளது.

இது தொடர்பான தாக்குதல் திட்டத்தை வகுத்த முன்னாள் கொமாண்டோக்கள் இருவர் சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டு, அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி இரு சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்துக்குள் நுழைந்து 'இரசாயன' தாக்குதலை நடத்தி அவர்களை மீட்டுச்செல்லத் திட்டமிடப்பட்டிருந்தது எனவும், கொமாண்டோ உடையில் சி.ஐ.டிக்குள் ஊடுருவியே தாக்குதல் நடத்தப்படவிருந்தது எனவும் இவர்கள் கூறியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

சி.ஐ.டி. வளாகத்தில் உள்ள பாதுகாப்பு தரப்புகள்மீதும் தாக்குதல் நடத்திவிட்டு, 'ஹரக்கட்டா', 'குடுசலிது' ஆகிய இருவருக்கும் கொமாண்டோ ஆடை அணிவித்துவிட்டே அவர்களை மீட்டுச் செல்ல வியூகம் வகுக்கப்பட்டுள்ளது எனவும், இதற்காக கொமாண்டோ பயிற்சி பெற்றவர்களை ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் சி.ஐ.டியினர் கொழும்பு கோட்டை நீதிமன்றத்துக்கு நேற்றுமுன்தினம் தெரியப்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோட்டை நீதிவான் திலிக கமகே, சி.ஐ.டியினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் கொமாண்டோக்களிடம் விரிவான விசாரணை நடத்தப்பட்டுவருகின்றது. சி.ஐ.டி திணைக்களத்துக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, 'ஹரக்கட்டா', 'குடுசலிது' ஆகியோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அவர்களின் சட்டத்தரணிகள் மனுவொன்றின் ஊடாக, கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். இருவரையும் மீட்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது எனத் தகவல் வெளியாகியுள்ளதை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ஒ-44)

## வீடுடைத்து...

பெறுமதியான இரு அலைபேசிகள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் சந்திக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் வசிக்கும் கணவனை இழந்த பெண் தாதிய உத்தியோகத்தர், வழமை போன்று மருத்துவமனைக்கு நேற்றுக்காலை கடமைக்குச் சென்றுள்ளார். அவரது மகனும் பாடசாலைக்குச் சென்றுவிட்டார்.

இந்நிலையில் மீண்டும் அவர்கள் பிற்பகலில் வீட்டுக்கு வந்தபோதே, முன்பக்க கதவுடைக்கப்பட்டு வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த 2 அலைபேசிகள் மற்றும் ஒன்றரை இலட்சம் ரூபா பணம் என்பன திருடப்பட்டிருந்த விடயம் தெரியவந்துள்ளது. (அ-ஒ-125)

## ரணிலுக்கு...

செய்தி வெளியிட்டுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திடுதிப்பென அமைச்சரவை மாற்றத்தை மேற்கொண்டுள்ளார். ராஜபக்ச குடும்பத்தின் தீவிர விசுவாசியான கெஹலிய ரம்புக்வெலவிடமிருந்து சுகாதார அமைச்சை மீளப் பெற்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ரமேஷ் பத்திரணவிடம் கையளித்துள்ளார். இதனால் பெரமுன சீற்றமுற்றுள்ளது.

இந்த நிலையிலேயே மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதி ரணிலைத் தொடர்புகொண்டு அமைச்சரவை மாற்றம் தொடர்பில் விமர்சித்துள்ளார். தமது கட்சியின் ஆதரவிலேயே ஆட்சியிலிருப்பதை மறக்க வேண்டாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## மொட்டுவின்...

ரோஹித அபேகுணவர்த்தன வழங்கினார்.

'தொலைக்காட்சிகளில் மாலைவேளைகளில் நாடகங்கள் ஒளிபரப்பப்படும். அடுத்தநாள் என்ன நடக்கும் என்பதற்காக பார்வையாளர்கள் காத்துக்கொண்டிருப்பார்கள், என்ன நடக்கும் என்பதை முன்கூட்டியே காண்பித்துவிட்டால் அதில் சுவாரஸியம் இருக்காது. எமது 'நாயகன்' (ஜனாதிபதி வேட்பாளர்) தயார். ஏனைய ஏற்பாடுகளும் தயார். உரிய நேரத்தில் அறிவிப்பு விடுக்கப்படும்' என்றார் அவர்.

அந்த நாயகன் ரணில் விக்கிரமசிங்கவா என்ற கேள்விக்குப் பதில் வழங்க அவர் மறுத்துவிட்டார். (அ-ஒ-44)

## கோமாளிகளின்...

கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் நாடாளுமன்றம் கோமாளிகளின் கூடாரமாக மாறி உள்ளது. இலங்கையில் தற்பொழுது அதிகமானவர்கள் ஒருவேளை உணவையே உண்ணும் நிலை ஏற்பட்டுள்ளது. அதிலும் சிலர் ஒருவேளை உணவைக்கூட உண்ண முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அந்த அளவுக்கு இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. இந்நிலை தொடருமாயின் சோமாலியாவைவிட எமது நாடு படு பாதாளத்துக்குச் செல்லும்.

கடற்றொழில் அமைச்சர் தற்போது சீனாவிடம் மண்டியிட்டுள்ளார். அங்கிருந்து மீன்களை இறக்குமதி செய்வதற்கு இணங்கியிருக்கின்றார். இனிவரும் காலங்களில் இறக்குமதி செய்யப்படுகின்ற மீன் இனங்களையே நாங்கள் உண்ண வேண்டிய நிலை ஏற்படும். மீனவர்களின் வாழ்வாதாரமும் இல்லாமல் அழிக்கப்படும் சூழல் ஏற்படும் - என்றார். (அ-ஒ-27)

## மனைவியின்...

திருமணம் செய்து வாடகைவீடொன்றில் கணவருடன் வசித்து வந்த தனது மகளைக் காணவில்லை என தாயொருவரால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணையைத் துரிதப்படுத்தி பெண்ணின் கணவரை பொலிஸார் கொழும்பில் வைத்து கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், மனைவியை (ஞானசீலன் கீதாஞ்சலியை) சண்டையின்போது கழுத்தில் தாக்கினேன். அவர் கீழே விழுந்தார். அதன் பின்னர் உயிரிழந்தார். யாருக்கும் தெரியாமல் மலசலகூடத்துக்கு அருகிலுள்ள குழியில் சடலத்தைப் போட்டு மூடிவிட்டேன் எனக் குறிப்பிட்டார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

அதற்கமைய நீதிமன்ற அனுமதிபெற்று குறித்த பெண் கொன்று புதைக்கப்பட்டதாக நம்பப்படும் குழி தோண்டப்பட்டபோது, பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது. சடலம் அவரது பெற்றோரிடம் நேற்று புதன்கிழமை ஒப்படைக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட கணவனை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோது அவரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (அ-ஒ-ச-19)

## சீனாவுக்குச்...

இருந்து தங்களைக் காப்பாறுமாறு இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப்பிரதிநிதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த வட மாகாண க.தொ.கூ.ச.சமாசங்களின் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசாவே இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

எங்களுடைய கடற்றொழில் அமைச்சர் கடந்தவாரம் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியைச் சந்தித்து இந்திய இழுவைப்படகுகளால் வடக்கு கடற்றொழில் சமூகம் பாதிக்கப்படுகிறது. அதனைத் தடுத்து நிறுத்த இந்திய மீனவர் பிரச்சினையில் ஐ.நா. தலையிட்டு தீர்வுகாண வேண்டும் எனத் தங்களிடம் மனு அளித்துள்ளார், அதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

ஆனால், வடக்கிலே அமைக்கப்படும் கடலட்டைப் பண்ணைகள், தடைசெய்யப்பட்ட உள்ளூர் தொழில்முறைகள் என்பவற்றால் வடக்கு மாகாணக் கடல் வளம் அழிக்கப்பட்டு கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரமும் நாசமாக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்களைக் கொண்டு உள்ளூரில் தடைசெய்யப்பட்ட தொழில்களைக் கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காது, இவற்றை மூடிமறைக்கவே இந்திய மீனவர்களது பிரச்சினையை மட்டும் பூதாகரப்படுத்தி வருகின்றனர்.

நாங்கள் உங்களைச் சந்திக்க முடியாதவர்களாக இருக்கின்றோம். நீங்களும் எங்களைச் சந்திக்கும் நிலையும் இதுவரை இல்லை. ஆகவே ஊடகங்கள் வாயிலாக நாங்கள் உங்களிடம் இந்த விடயங்களை முன்வைக்கின்றோம்.

முக்கியமாக யாழ். மாவட்டத்தில் கடற்றொழில் அமைச்சால் சட்டவிரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எங்களுடைய பாரம்பரிய கடற்றொழிலாளர்களையும் எங்களது இருப்பையும் அழிக்கும் வேலையை சீனாவோடு இணைந்து கடற்றொழில் அமைச்சர் செய்து வருகின்றார்.

உள்ளூரிலே கடற்றொழிலாளர்கள் நாங்கள் நெருக்கப்பட்டு நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். கடற்றொழில் திணைக்களத்தாலும் பணிப்பாளர் நாயகத்தாலும் கடற்றொழில் அமைச்சாலும் ஏற்படுத்தப்பட்டு வரும் நெருக்குதல்களில் இருந்து எங்களைக் காப்பாற்றுமாறும், எங்களது கடலில் நாங்கள் சுதந்திரமாக மீன்பிடித்து ஆளுமையுடன் வாழ்வதற்கு ஒருவழியை ஏற்படுத்தும் வகையில் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கடற்றொழில் அமைச்சரிடம் வலியுறுத்தவேண்டும் என்பது வடக்கு மாகாண மீனவர்களாகிய எங்களது எதிர்பார்ப்பாக உள்ளது - என்றார். (அ-ஒ-100)

## தமிழர்கள்...

மாலை சென்ற தேரர், தமிழர்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்டோரை எச்சரிக்கும் வகையில் கடும் தொனியில் கத்திக் கூச்சலிட்டதன் காரணமாக அந்தப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இருதயபுரம் கிழக்கில் சிங்கள மயானம் உள்ளது. அங்கு வீடு உடைத்த கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டுள்ளன. அதனைப் பார்வையிட வந்த தேரர், பொலிஸார் முன்னிலையே தமிழர்கள் மீது இனத்துவேசத்தைக் கக்கினார். அங்கு வந்த பொலிஸார் அவரை சமாதானப்படுத்தி அங்கிருந்து செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். (அ-ஒ-இ)

## கடன்...

ஆளுநரை நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'இன்று (நேற்று புதன்கிழமை) நான் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரை சந்தித்து சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கை, சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாவது தொகுதி கடனைப் பெறுவதில் முன்னேற்றம் ஆகியவற்றுக்காக வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நியாயபூர்வமானதாகயிருக்க வேண்டியதன் அவசியத்தையும் கடன் வழங்கிய அனைவரையும் சமமான விதத்தில் நடத்துவது அவசியம் என்பதை வலியுறுத்தினேன். இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்வது அவசியம். இலங்கையில் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியை உறுதி செய்து நியாயம், வெளிப்படைத் தன்மை, ஒருமைப்பாடு மற்றும் உள்ளடக்கிய தன்மை ஆகியவற்றை மதிக்கும் ஒரு பொருளாதாரச் சூழல் குறித்து அமெரிக்கா உறுதியுடன் உள்ளது' எனத் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் தாக்குதல் சர்வதேசப் போர்க்குற்றம்

## ஐ.நா. அறிவிப்பு




வொஷிங்டன், ஒக். 26

காஸாவில் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்கள் போர்க்குற்றங்கள். வடக்கு காஸாவிலும், மக்களின் பாதுகாப்பு இடங்கள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் ஹமாஸைத் தண்டிப்பதாகக் கூறிக்கொண்டு இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதலை ஏற்கமுடியாது - என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரஸ்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய கிழக்கில் நிலைமை ஒவ்வொரு மணிநேரத்துக்கும் மோசமடைந்து வருகிறது. பிரிவுகள் சமூகங்களைப் பிளவுபடுத்தி பதற்றத்தை ஏற்படுத்துகின்றன.

இதனால் போரின்போது பொதுமக்களின் பாதுகாப்புத் தொடங்கி கொள்கைகளில் உறுதியாக இருப்பது இன்றியமையாதது.

இந்த மனிதத் தன்மையற்ற துன்பத்தைக் குறைப்பதற்கு, மனிதாபிமான உதவிகள் கொண்டு செல்வதை எளிதாக்க வேண்டும். பணயக் கைதிகள் விடுதலை செய்யும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஐ.நா. தீர்மானங்கள், சர்வதேச சட்டங்கள், முந்தைய ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இஸ்ரேலியர்களின் பாதுகாப்புக்கான நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

அதேநேரம் பலஸ்தீனத்தின் சுதந்திரமான அரசுக்கான தேவை உணரப்படவேண்டும். மேலும், குடிமக்களைக் கொலை செய்தல் மற்றும் கடத்துதல், குடியிருப்புப் பகுதிகளில் நடத்தப்பட்ட ஹமாஸ்களின் ரொக்கெட் குண்டுத்தாக்குதலை நியாயப்படுத்த முடியாது.

அதேபோல் ஹமாஸ்களின் தாக்குதல் காரணமின்றி நடத்தப்படவில்லை என்பதையும் ஒத்துக்கொள்ளவேண்டும்.

பலஸ்தீனர்கள் கடந்த 56 வருடங்களாக ஆக்கிரமிப்புகளின் அழுத்தத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். ஹமாஸ்களின் தாக்குதலுக்காகப் பலஸ்தீன மக்கள் தண்டிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ம)



# ஐ.நா. பொதுச்செயலர் பதவி விலகவேண்டும்

## ஹமாஸை ஆதரிக்கிறாரென இஸ்ரேல் போர்க்கொடி

வொஷிங்டன், ஒக். 26

ஐ.நா. பொதுச்செயலர் உடனடியாகப் பதவி விலகவேண்டும். ஹமாஸுக்கு ஆதரவாக அவர் தெரிவித்த கருத்துக்கள் அபத்தமானவை -என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான இஸ்ரேல் தூதுவர் கிலாட் இர்டான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஹமாஸ் தாக்குதலை ஐ.நா. செயலாளர் பொறுத்துக்கொண்டு நியாயப்படுத்துகின்றார். அவருடைய கருத்துக்களை ஏற்க முடியாது. குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்களை இரக்கமின்றிக் கொன்று குவித்த ஹமாஸின் தாக்குதலை நியாயப்படுத்துவது அபத்தமானது. ஆதலால் அவர் பதவி விலகவேண்டும் - என்றார். (ம)

# ஹமாஸ் அமைப்பை வேரறுக்க எந்த எல்லைக்கும் செல்வோம்!

## இஸ்ரேலின் பிரதமர் எச்சரிக்கை



டெல்அவிவ், ஒக். 26

ஹமாஸ் அமைப்பை வேரறுப்பதற்காக எந்த எல்லைக்கும் செல்வோம் என்று இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்தார்.

இஸ்ரேலின் தாக்குதல் போர்க்குற்றம் என்று ஐ.நா. அறிவித்துள்ள நிலையில், இஸ்ரேலின் பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:

ஹமாஸ்களின் தாக்குதலை வேரறுக்க இஸ்ரேல் எந்த எல்லைக்கும் செல்லும். ஹமாஸ்கள் குழந்தைகளைக் கொன்று அவர்களின் தலைகளைத் துண்டாக்கினார்கள். பாலியல் ரீதியிலான குற்றங்களில் ஈடுபட்டனர். ஆதலால், ஹமாஸ் கனவிலும் நினைத்துப்பார்க்க முடியாத பதிலடியை இஸ்ரேல் கொடுக்கும். ஹமாஸை வேரறுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இஸ்ரேல் எடுக்கும். ஹமாஸின் அரசியல் கட்டமைப்பை உடைத்தெறிவோம் - என்றார். (ம)

# இணுவிலில் தங்கரத பவனி

யாழ்ப்பாணம், ஒக். 26

இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தில் நவராத்திரியை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நவகலச அபிஷேகம் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 5 மணியளவில் நவசக்தி ஹோமம் ஆரம்பமாகித் தொடர்ந்து நவசக்தி அர்ச்சனையும் இன்று இரவு 7 மணியளவில் நவதுவார தங்கரத பவனி இடம்பெறும் அதனைத் தொடர்ந்து இணுவில் இந்து மகாசபையின் அனுசரணையில் இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலையால் நவராத்திரி தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது. (ம-66)



# கற்பூரம் தயாரித்தல் தொழிற்பயிற்சிகள்

கிளிநொச்சி, ஒக். 26

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அலகால் கற்பூரம் தயாரித்தல் தொடர்பான இருநாள் தொழில்நுட்பப் பயிற்சிகள் அண்மையில் இடம்பெற்றன.

பயிற்சிநெறியில் தெல்லிப்பழை விதாதா வள நிலையத்தின் விஞ்ஞான, தொழில்நுட்ப உத்தியோகத்தர் சி.சுதர்சன் வளவாளராகக் கலந்துகொண்டார். இதில் பிரதேசத்தைச் சேர்ந்த 30 தொழில்முயற்சியாளர்கள் பங்குபற்றினர். (ச-9)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நூற்றாண்டுகால சிறப்புரை அரங்கம்




யாழ்ப்பாணம், ஒக். 26

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டுகால சிறப்புரை அரங்க நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை காலை 8.30 மணியளவில் மேற்படி கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் கலாசாலைகளின் முன்னாள் விரிவுரையாளர் இ.மருதலிங்கம் அதிதிப் பேச்சாளராகக் கலந்துகொண்டு 'அந்தக்கால ஆசிரியர்களும் இந்தக்கால ஆசிரியர்களும்' எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். (ம-66)

08 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச வீசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
V2 Travels
0768226244
0768226241

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.